**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 255/2012**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **02.02.2026** |
| **பெயர்** | **சகுந்தலா** |
| **க/பெ** | **முத்து** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.38.a.m**
**10 ம் பிரதிவாதி தரப்பில்**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

12. வழக்கு என் தாத்தா கண்ணாயிரத்திற்கு சுய சம்பாத்திய சொத்தா அல்லது பூர்வீக சொத்தா என்றால் கொஞ்சம் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள். மற்ற சொத்துக்கள் சுய சம்பாத்திய சொத்தா என்றால் மூவரும் சேர்ந்து சம்பாதித்து வாங்கியது. நான் கூறும் மூவர் கண்ணன், சின்னப்பன் மற்றும் கந்தசாமி நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் மொத்த சொத்துக்களும் கண்ணாயிரத்தின் சொத்துக்களாகத் தான் குறிப்பிட்டுள்ளேனா தவிர மேற்சொன்ன மூவருக்கும் சொந்தம் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

13. கந்தசாமி தான் கடைசி சகோதரர், கண்ணன் மூத்தவர் ஆவார். கண்ணாயிரம் இறந்த பிறகு கண்ணன் என்பவர் தான் கர்த்தாவாக இருந்தாரா என்றால் சரியல்ல. கந்தசாமி தான் படித்தவர் என்று தான் அவரிடம் குடும்ப பொறுப்பை ஒப்படைத்தார்கள். கந்தசாமி 5 ம் வகுப்பு வரை படித்துள்ளார். மேற்சொன்ன விவரங்களை என் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கண்ணாயிரத்தின் இறப்பிற்கு பிறகு மூவரும் சில சொத்துக்களை தனித்தனியாக பிரித்து அனுபவித்தார்கள் என்றால் சரியல்ல.

14. இந்த வழக்கு கீழ்மேனி கிராமத்தில் 8 ஐட்டம் சொத்துக்கள் அடம்பாக்கம் கிராமத்தில் 2 ஐட்டம் சொத்துக்களும் வழக்கு சொத்துக்களாக காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். தாவா 1ம் ஐட்டம்

சொத்தின் சர்வே எண் 56/1 –ல் 1 ஏக்கர் 21 செண்ட் நிலம், துரை என்பவரிடம் கந்தசாமி 25.06.1979 தேதியிட்ட கிரையப்பத்திரத்தை முன்னிலையிட்டு கிரையம் பெற்றார் என்றால் மூவரும் சேர்ந்து வாங்கினார்கள். அந்த பத்திரம் கந்தசாமி பெயரில் தான் பதிவாகி உள்ளது என்றால் சரிதான்.

15. 2–ம் ஐட்டம் சொத்தின் சர்வே எண் 56/7 மொத்தம் 1 ஏக்கர் நிலம் என்றால் சரிதான். அதில் 50 செண்ட் நிலம் சம்பந்தம் என்பவரிடம் இருந்து கந்தசாமி பெயருக்கு கிரையம் பத்திரம் எழுதப்பட்டது என்றால் மூவரும் வாங்கி கந்தசாமி பெயருக்கு கிரையம் பதிவு செய்தார்கள். அதே சர்வே எண்ணில் மீதம் 50 செண்ட் நிலம் பொன்னுசாமி என்பவருக்கு சொந்தம் என்றால் சரிதான். அதை மூவரும் சேர்ந்து வாங்கினார்களா என்றால் மூவரும் சேர்ந்து வாங்கினார்கள். யார் பெயரில் வாங்கினார்கள் என்றால் கந்தசாமி பெயரில் வாங்கினார்கள். மேற்சொன்ன கிரையம் கந்தசாமி பெயரில் வாங்கவில்லை என்றும், கண்ணன் பெயரில் தான் வாங்கப்பட்டது அவர் பெயரில் தான் பத்திரம் உள்ளது என்றால் சரியல்ல, மூவரும் சேர்ந்து தான் வாங்கினார்கள்.

16. தாவா ஐட்டம் எண் 56/8–ல் 42 செண்ட் யாருக்கு சொந்தமானது என்றால் மூவருக்கும் சொந்தமானது. அந்த பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் ஆளியம்மாள் பெயரில் உள்ளது. ஆளியம்மாள் என்பவர் கண்ணின் மனைவி என்றால் சரிதான். ஆளியம்மாள் பெயரில் 3ம் ஐட்டம் சொத்து குறித்து பத்திரம் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆளியம்மாள் உயிருடன் இருக்கும் போதே 29.02.1984–ல் கந்தசாமி பெயருக்கு உயில் எழுதி வைத்து பதிவு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

17. என் தகப்பனார் எங்கள் திருமணத்திற்கு பிறகு தனியாக இருந்து வந்தார் என்றால் சரிதான். என் தகப்பனாரையும் மூத்த சகோதரரான கண்ணனையும் கந்தாசமி தான் பாதுகாத்து பராமரித்து வந்தார் என்றால் அவர் உயிருடன் இருந்த காலம் வரையில் பாதுகாத்து வந்தார். மூவரில் கடைசியாக இறந்தவர் யார் என்றால் என் தந்தையான சின்னப்பன். அந்த விசுவாசத்தின் காரணமாக என் தந்தையும் கண்ணன் அவர்களும் 22.02.1984 ல் கந்தாசமி பெயருக்கு தாவா 4 முதல் 7 ஐட்டம் சொத்துக்களை குறித்து உயில் எழுதி பதிவு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

18. என் தந்தை அது குறித்து எதுவும் என்னிடம் கூறிவில்லை. சர்வே எண் 57/19–ல் 12 செண்ட் நிலம் அந்த உயிலில் குறிப்பிட்டு இருந்தது என்றால் அவ்வாறு ஒரு உயில் எதுவும் எழுதவில்லை. அதே உயிலில் அடப்பாக்கம் கிராமத்தில் உள்ள தாவா 2 ஐட்டம் சொத்துக்களை குறித்து

குறிப்பிட்டு இருந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா 8 ஐட்டம் சொத்து சர்வே எண் 57/18–ல் 12 செண்ட் நிலம் முதலில் குப்பன் என்பவர்க்கு சொந்தமானது என்றால் சரிதான். அவரிடமிருந்து அந்த சொத்தினை யார் வாங்கினார்கள் என்றால் மூவரும் சேர்ந்து தான் வாங்கினார்கள். பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் கந்தசாமி பெயரில் தான் உள்ளது. மேற்சொன்ன விவரங்களை 10–ம் பிரதிவாதி அவரின் பதிலுரையில் குறிப்பிட்டுள்ள போது அதனை குறிப்பாக வாதிகள் மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

19. அதனால் தாவா சொத்து அனைத்தும் கந்தசாமிக்கு உரிமை உடையது என்றும், பிற வாரிசுகளுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 6 பிரதிவாதிகள் அவர்களிடம் இருந்து தான் 9 ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. விற்பனை செய்ததை கூறவில்லை. 9 ம் பிரதிவாதியிடம் இருந்து தான் 10 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். முதலில் 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் மோகன் ரெட்டி மீது பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்ததாக என் வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முதலில் தெரியாது, 08.10.2012 தான் தெரியவந்தது.

20. மேற்சொன்ன பாகப்பிரிவினை வழக்கில் கண்ணன் வகையறா பாதி பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் 5–ம் வாதியான மஞ்சுளா என் மூத்த சகோதரி 1–ம் வாதியின் மகள் என்றால் சரிதான். மஞ்சுளா இவ்வழக்கின் 3–ம் பிரதிவாதியான ஜெகதீஷ் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 25 ஆண்டுகளுக்கு முன்னரே திருமணம் செய்து கொண்டனர். எனக்கும், எனது சகோதரி மற்றும் கந்தசாமி குடும்பத்திற்கும் விரோதமா என்றால் முதலில் இல்லை இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு விரோதம். 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கானது மோகன்ரெட்டி வராதா காரணத்தினால் ஒருதலைபட்சமாக தீர்ப்பான விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

21. சம்மந்தி என்ற முறையில் 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் சம்மந்தியான கந்தசாமி வகையறாக்களை மேற்சொன்ன மோகன்ரெட்டி மீதான வழக்கு குறித்து கேட்டோமா என்றால் கேட்டோம். அவ்வாறு விற்பனை செய்யவில்லை என்று கூறிவிட்டனர். மோகன் ரெட்டி அவர் மீது ஏற்பட்ட தீர்ப்பாணையை மறைத்து 10–ம் பிரதிவாதியான கம்பெனிக்கு விற்றுவிட்டார் என்றால் தெரியாது. 10 ம் பிரதிவாதியின் மீது 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் ஒரு விடுதலை பத்திரம் எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

22. மேற்சொன்ன விடுதலைப்பத்திரம் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன பத்திரம் செல்லாது என்று கோரியுள்ள போது யாரையேனும் வைத்து அந்த படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்த கொள்ளவில்லை. வா.சா.ஆ 1 ஆவணம் நகல் பெற்ற பிறகு 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் 10 ம் பிரதிவாதயிடம் இருந்து ரூ.80,00,000 பெற்றார்கள் என தெரிந்து கொண்டேன். 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகளுக்கு உரிமை இருப்பதாக பணம் கொடுக்கப்படவில்லை என்று சமாதானம் ஏற்பட்டு இருக்கும் முன்னிலையில் தான் அவ்வாறான பணம் வா.சா.ஆ 1 ஆவணம் மூலம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

23. தவா சொத்துக்களில் எந்த உரிமையும் எங்களுக்கும், 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகளுக்கும் உரிமை இல்லை என்று தெரிந்தும் பணம் பறிப்பதற்காக 7 மற்றும் 8 ம்பிரதிவாதிகள் 9 ம் பிரதிவாதி மீது வழக்கு தகா்கல் செய்தார்கள் என்றும் அதே நோக்கத்துடன் நாங்களும் இவ்வழக்கை தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அதில் வழக்கு சொத்திற்கான பட்டா ஆளியம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். பொது சொத்து தான் அது. வா.சா.ஆ 7 ஆவணத்தின் மூலம் மீது சொத்துக்களுக்கான பட்டா கந்தசாமி பெயரில் தான் உள்ளது என்றால் கந்தசாமி பெயரில் பத்திரம் இருந்ததால் அவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது. வா.சா.ஆ 8 ஆவணம் என் தகப்பனார் சின்னப்பன் மீதும் கண்ணன் மீதும் இருந்தாலும் அவர்கள் எழுதிய உயில் சாசனத்தின் முன்னிலையில் அவர்கள் இறந்த பிறகு கந்தசாமிக்கு தான் அந்த சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

24. வாதிகள் தாக்கல் செய்துள்ள விடுதலை பத்திரத்திரத்தில் 7 மற்றும் 8–ம் பிரதிவாதிகள் அல்லாமல் அவர்களின் வாரிசுகளும் கையொப்பம் இட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன மோகன்ரெட்டிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலும் தற்போது இந்த வழக்கிலும் வாதிகளுக்கு ஆஜராகின்ற வழக்கிறஞரும் ஒரே நபர் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எதிலும் வாதிகளுக்கு உரிமை இல்லாத காரணத்தினால் வாதிகளுக்கு அவர்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியலல.

**விசாரணை முடியும் நேரம். 12.30 p.m.**